**தலைப்பு – 270 – அம்பாறை மாவட்டச் செயலகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

அம்பாறை மாவட்டச் செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஏப்ரல் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பாறை மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட

கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) அம்பாறை மாவட்டச் செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1. நிதிக்கூற்றுக்கள், சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்படாமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1/2017ஆம் இலக்கமுடையதும் 2017 ஜுன் 28ஆம் திகதியுடைய நிதி மற்றும் ஊடக அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம் அரசாங்கத்தின் சகல நிதியல்லாத சொத்தக்கள் 2017 ஜுலை 31 ஆம் திகதிக்கு முன் கட்டாயமாக கணக்கேடுகளில் பதியப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.<br><br>எனினும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட SA 6 படிவத்தின் படி நிதியல்லாத சொத்தக்களின் பெறுமதி ரூ. 704.26 மில்லியன் ஆக இருந்ததுடன் நிதி நிலமைக் கூற்றில் அது ரூ. 255.79 மில்லியனாக இருந்தது. அம்பாறை மாவட்ட செயலகத்தின் 1,465 சொத்தத் தலைப்புக்களின் கீழ் அவற்றின் பெறுமதி ரூ.231.74 மில்லியனாகவும் அம்பாரை பிரதேச செயலாளர் அலுவலகத்தின் ரூ 24.03 மில்லியன் பெறுமதியான சொத்தக்கள் மாத்திரமே நிதிநிலமை கூற்றில் உற்படுத்தப்பட்டிருந்தமையினால் மேற்படி வித்தியாசத்துக்கு காரணமாய் அமைந்தது. | சுற்றறிக்கையின் படி மாவட்ட செயலகத்துக்குறிய சகல சொத்துக்களும் சரியாக கணக்குகளில் பதியப்படுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சோத்துக்களின் பெறுமுதி கண்டுபிடிக்கப்பட்ட ஆதனங்களுக்கு மட்டுமே Cigass நிகழ்ச்சிக்கு தரவு உற்படுத்தப்பட்டிருந்ததுடன் தற்போது போக்குவரத்து வாகனங்களும் கணக்கெடுகளில் பதியப்பட்டுள்ளது. |

1.6.2 **நிதி நிலமைக் கூற்று**

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச செயலாளர் அலுவலகங்கள் 05 க்குறிய கட்டிடங்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலகத்தினால் கண்காணிக்கப்படும் சகல பிரதேச செயலாளர் அலுவளகங்களினதும் எல்லா காணி கட்டிடங்களும் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | கட்டிடங்களின் பெறுமதிகள் ''மதிப்பீட்டுத் திணைக்களத்'' திடம் மதிப்பீட்டை மேற்கொள்ளுமாறு வேண்டி நின்ற போதிலும் அவற்றின் பெறுமதிகள் இதுவரை மதிப்பீடு செய்யப்படாமையினால் அக்கட்டிடங்கள் உற்படுத்தப்படவில்லை. 2019.07.15 ஆம் திகதி மதிப்பீட்டுத் திணைக்களம் இவ் அலுவலகத்துக்கு வருகைதந்து மதிப்பீடுகளை மேற்கொண்டதுடன் அறிக்கை பெறப்படவுள்ளது. |
| (ஆ) 15 பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கான காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கேடுகளில் பதியப்படவில்லை. | பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்குறிய எல்லா காணி கட்டிடங்களும் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | 2019.07.15 ஆம் திகதி மதிப்பீட்டுத் திணைக்களம் இவ் அலுவலகத்துக்கு வந்து மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளதுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| (இ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்தக்களுக்குறிய 526 படிவம் 2018 ஜனவரி 01ஆம் திகதியன்று சொத்தக்களின் பெறுமுதி ரூ.680.14 மில்லியனாக இருந்தது. எனினும் 2017 டிசம்பர் 31ஆம் திகதிக்கு அப்பெறுமதி ரூ. 74.09 மில்லியனாக காணப்பட்டது. அதன்படி 2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று காணப்பட்ட சொத்தக்கள் 2018ஆம் ஆண்டுக்கு மதிப்பீடு செய்யப்பட்டதா என்பது பற்றி உறுதியாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணிப்பீட்டாண்டுகளுக்கான கணக்குகள் தயாரிக்கப்படும்போது ஆரம்ப மீதிகளுடன் ஒப்பிடப்பட வேண்டிய கணக்குகளுடன் ஒப்பிட்டு மொத்தக் கணக்குகளும் இற்றைப்படுத்தப்பட வேண்டும். | கடந்தகால கணக்குகளை சரிசெய்யும் போது நிதி நிலமை கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை. அதனால் இதன் முக்கியத்துவம் 2018 ஆம் ஆண்டில் உற்படுத்தப்பட்டமையால் அதனை சரியான முறையில் கணக்கில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் Assets inventory system இல் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக இங்கு பெறுமதிகளில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளது. இவற்றை சரிசெய்வதற்கு பொது 122 மூலம் 2018ஆம் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (இது தொடர்பான ஆவணங்கள் கணக்காய்வின் போது உங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது) ஆகையால் 2018 இன் பின் சொத்துக்கள் கணக்கு திருத்தப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | | ஆகையால் எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் எற்படாது என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். |
| (ஈ) வருடத்தின் சொத்துக்கள் வெளியேற்றம் அல்லது அழித்தொழிக்கப்படாத போதிலும் மூலதனக் கூற்றில் (AcA6) மற்றும் ரூ 26316881 பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் விற்பனை என காட்டப்பட்டுள்ளது. | நிதிக் கூற்று சமர்ப்பிக்கப்படும் பொது குறித் படிவத்துக்கு அமைவாக அறிக்கையிடப்பட வேண்டும். | ஏதேனும் சொத்தொன்று Cigass கனிணியில் பதிவேற்றப்படும் போது ஏதேனும் பிழைகள் ஏற்படின் அதனை திருத்தும் வகையில் செயற்கட்டளையினுள் விற்பனை அல்லது அழிக்கப்பட்டதாக குறிப்பிட வெண்டும். உண்மையில் அது Cigass செயற்பாட்டுக் கட்டளையில் காணப்படும் குறைபாடாகும். |

### 1.6.3 ஆவணங்கள் ஏடுகள் பேணப்படவில்லை.

--------------------------------------------------------------------

மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் ஆவணங்கள் பேணப்படவில்லை என்பதை மாதிரிக் கணக்காய்வு பரிசொதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| **<u>பிணை ஆவணம்</u>** | | |
| நிதி ஒழுங்குவிதிகள் 891(1) இன் பிரகாரம் பிணை செலுத்த ஏற்புடைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் விவரங்கள் அடங்கலான பிணை ஆவணம் பேணப்பட்டு வரவேண்டும் எனவும் 53 உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் ஒழுங்குவிதிகள் 891 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் உள்ளடங்கியவாறு பிணை செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்கள் பற்றிய ஆவணமொன்று பேணப்படவேண்டும். | 2019 ஆகஸ்ட் 08 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வாளர்களின் கூட்டத்தில் மீண்டும் மதியுரை வழங்கப்பட்டிருப்பதுடன், முன்னேற்றங்களை அறிவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| **மின் உபகரணங்கள் பற்றிய ஆவணம்**<br><br>நிதி ஒழுங்குவிதிகள் 454 (2) இன்படி மின் உபகரணங்கள் பற்றிய ஆவணமொன்று பேணப்பட வேண்டும் எனினும் அவ்வாறு பேணப்படவில்லை. | நிதி ஒழுங்குவிதிகள் 454 (2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்கக் கட்டிடங்களில் உள்ள எல்லா மின் உபகரணங்கள் உதிரிப் பாகங்கள் தொடர்பிலும் ஆவணப் புத்தகமொன்று பேணப்பட வெண்டும். | -அவ்வாறே- |
| **பொறுப்புக் கணக்குகள்** | | |
| நிதிப் ஒழுங்குவிதிகள் 214 இன் படி பொறுப்பு ஏடொன்று பேணப்பட வேண்டும். எனினும் பிரதேச செயலாளர் அலுவலகம் பொறுப்பாவணமொன்றை பேணியிருக்க வேண்டும் எனினும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | நிதிப் ஒழுங்குவிதி 214 இன் படி பொறுப்புக்கள் தொடர்ந்து பரிசொதிக்கத்தக்க வகையில் பொறுப்பு ஆவணமொன்றில் அப்பொறுப்புக்கள் பதியப்பட வேண்டும். | -அவ்வாறே- |
| **நட்டஈட்டுக் கணக்கேடு** | | |
| நிதிப் ஒழுங்குவிதி 110 இன் படி நட்ட ஈட்டுக் கணக்கொன்று பேணப்பட்டிருக்க வேண்டும் எனினும் பிரதேச செயலாளர் அலுவலகம் நட்டஈட்டுக் கணக்கொன்றை பேணி வரவில்லை. | 110 ஆம் ஒழுங்கு விதிக்கு அமைய அதன் கீழுள்ள படிவத்தின் படி நட்டங்கள் தொடர்பான ஆவணமொன்று பேணப்பட வேண்டும். | -அவ்வாறே- |

**1.6.4 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

--------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சிரைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் செயற்பட்டுவந்த ‘புனர்வாழ்வு அதிகாரசபை’ 2014 ஆம் ஆண்டில் திருக்கோயில் நியாயாதிக்க எல்லையில் அமைந்துள்ள தங்கவேலாயுதபுரம் மற்றும் கஞ்சிக்குடியாறு கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது. ஆதன் | நிதி ஒழுங்குவிதி 136,137,138 மற்றும் 139 ஆகிய ஏற்பாடகளுக்கு அமையவும் முகாமைத்துவக் கொள்கைகளுக்கு அமையவும் பணியாற்றியிருக்க | என். மஹேஷ்வரன் என்ற பயனாளிக்கு வீடு ஒன்றை கட்டுவதற்கு 03 கட்டங்களில் ரூ. 200,000 திருக்கோயில் மக்கள் வங்கிக் கிளைக் கணக்கூடாக பணம் விடுவிக்கப்பட்டுள்ளது. பின்னர் மேற்படி கருத்திட்டத்தின் வழங்குனராக அவர் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்டதன் |

| | | |
|---|---|---|
| கீழ் வீடுகளை அமைப்பதற்கு பயனாளிகளுக்கு பணம் வழங்கையில் ஒரு பயனாளிக்கு ரூ. 200,000 மேலதிகமாக வழங்கியிருந்ததால் குறித்த விடயம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் இக்கொடுப்பணவின் போது தமது பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றவில்லை என தெரியவந்துள்ளது. | வேண்டும். | பின் சேவையை பெற்றுந்ததந்ததால் மீண்டும் ரூ. 200,000 வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மதிப்பாய்வு

------------------------

### 2.1.1 சேமிப்பு மீதிகள்

------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, பிடித்துவைக்கும் வரி ஆகியவை தொடர்பில் அறவிடப்பட்ட ரூ. 2,108,443 தொகை சேமிப்புக்கணக்கில் வைப்பிலிடப் பட்டிருந்த போதும் அப் பணத் தொகை சம்பந்தமாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | ஏதேனும் கொடுக்கல் வாங்களுக்கு சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, பிடித்துவைக்கும் வரி சம்மந்தமாக குறித்த சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். | 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் சேமிப்புக்கணக்கில் காட்டப்பட்டுள்ள பெறுமதிசேர்க்கப்பட்ட வரி, மற்றும் குறித்த உள்நாட்டு வரி வருமான அனுமதிப்பதிதிரம் கிடைக்கப்பெறாத நிலையில் பிடித்து வைக்கப்பட்ட பணம் பிரித்தறிய முடியாத வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணமாக சேமிப்புக்கணக்கில் வைப்பில் இடப்பட்டுள்ளது. குறித்த அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாவிடின் இத்தொகை தேசிய வருமானத்துக்கு மாற்றப்படும் என வாய் மூலமும் எழுத்துமூலமும் ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3. நடவடிக்கைகளின் கணிப்பீடு

---------------------------------------------------

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட அடைவுமட்டம் அடையப்பெறாமை.

------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு |
|---|---|---|

தமன பிரதேச செயலாளர் அலுவலகம் ‘தேசத்துக்கு மகுடம் 2013’ அபிவிருத்திக் கருத்திட்டத்தின்கீழ் செயற்படுத்துவதற்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டது.

1. திம்பிரிகொள்ள பன்னல்கம வீதியை மண் நிறப்பி ஒழுங்குபடுத்துதல், மற்றும் கல் மேல் பகுதி கொங்கிரீட் இட்டு செப்பனிடுதல்.

2. பன்னல்கம 1 C விளையாட்டு மைதானத்தை ஒழுங்குபடுத்துதல்.

3. தமன பக்மிட்டியாவ வீதியின் பக்கச் சுவர்கள் கட்டுதல் மண் நிறப்புதல்.

4. பன்னல்கம பக்மிட்டியாவ வீதியின் பக்கச் சுவர்கள் கட்டுதல் மண் நிறப்புதல் பாலம் கட்டுதல்.

5. பக்மிட்டியாவ வீதியின் தொம்ப மரம் அருகில் இருக்கும் பக்கச்சுவர் கட்டுதல் மண் நிறப்புதல்.

ஆகிய 5 கருத்திட்ங்களையும் நடைமுரைப் படுத்துகையில் ரூ. 6,512,909 பணம் கையாடப் பட்டள்ளமை கண்டுகிடிக்கப்பட்து.

அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும்போது வழங்கப்பட்டுள்ள ஒதுக்கல்கள் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை உச்ச அளவில் அப் பிரதேச மக்களுக்கு கிடைக்கும் வகையில் பணியாற்ற வேண்டும்.

**உத்தியோகத்தரின் கருத்துரை**

தமன பிரதேச செயலகத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கைகளுக்கு அமையவே இக் கருத்திட்டங்களுக்கான பணம் அச்சந்தர்ப்பங்களில் கடமையில் இருந்த உத்தியோகத்தர்களால் படிப்படியாக கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வறு இருந்தபோதிலும் கருத்திட்டங்களை முடிவுறுத்துவது சம்மந்தமான பிணக்கொன்று ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டன. அதற்கு இவ் அலுவலகத்தின் பிரதான பொரியியலாளரின் அறிக்கை பெறப்பட்டது. அவ் அறிக்கை ஏற்கனவே உங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல் பொலிஸ் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பில் விசேட விசாரணை நடாத்தி வருவதுடன் மேலதிக விசாரணை நடவடிக்கை களுக்கு குறித்த கோவை அவர்களது பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

## 3.2 சொத்தக்கள் முகாமைத்துவம்.

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கைத்தோழில் மற்றும் வர்த்தக அமைச்சின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தோழில்களை அபிவிருத்தி செய்யும் பிரிவு, மகளிர்களை பொருளாதார ரீதியில் உறுதி வாய்ந்தவர்களாக மாற்றி யமைப்பதற்கு சிறிய அளவிலான ஆடைக் கைத்தொழிற்சாலைகளை உருவாக்கும் கருத்திட்டமொன்றை செயற்படுத்தியிருந்தனர். அதன்படி 2017 ஆம் அண்டில் அம்பாறை மாவட்டத்தில் 08 பிரதேச செயலாளரட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூ. 19,525,600 பெறுமதிவாய்ந்த தையல் இயந்திரங்கள் 2019 பெப்ரவரி 11 ஆம் திகதியதுவரை செயற்படாமல் இருந்தன. | சகல சொத்துக்களும் எதிர்பார்க்கப்படும் அதி உச்ச பிரதிபலன்களை அடையத்தக்க வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். | குறித்த அமைச்சினால் உரிய அறிவுறுத்தல்கள் கிடைக்கப் பெறாததன் காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆடை உற்பத்திச் சிறு தொழிற்சாலைகளை நவீன முறையில் நடாத்திச் செல்வதற்குத் தேவையான மதியுரைகள் அடங்கிய கோவை அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த போதிலும் பயனாளிகள் சங்கங்களுடன் இணைந்து செயற்பட விரும்பாததன் காரணமாக நடைமுறைப் படுத்தப்பட்டபோது பிணக்குகள் எழுந்தன. |

**3.3 நட்டங்களும் சேதங்களும்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நட்டங்களும் சேதங்களும் பற்றிய அறிக்கைகளின் கிழ் எதுவுமில்லை என்றிருந்த போதிலும், மாவட்ட செயலகத்துக்குச் சொந்தமான EP-PD-2681 ஆம் இலக்கமுடைய வாகனத்துக்கு நேர்ந்தள்ள விபத்து நட்டம் ரூ. 122,364 ஆகக் காணப்படுகிறது. | நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளில் மாவட்ட செயலகத்துக்குறிய தகவல்கள் சரியாக அறிக்கையிடப்பட வேண்டும். | உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாணசபைகள் அமைச்சின் செயலாளரின் F/DA/07/WR115/002 ஆம் இலக்கமுடையதும் 2019 ஜுலை 10 ஆம் திகதியுடையதுமான கடிதத்தின் படி நட்டம் கணக்கேட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. |